## டவர் மண்டப திரையரங்கு மன்றம் - 2016

---

டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 01 ஆம் இலக்க டவர் மண்டப திரையரங்கு மன்ற அதிகாரச் சட்டத்தின் 12 (4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2018 ஜனவரி 22 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2**

காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டின் கீழ் காட்டப்பட்டுள்ள முதலீட்டு வட்டிக் கிடைப்பனவுகளினுல் கூட்டுத்தொகை ரூபா 333,607 தொகையான ஊழியர் கடன் வட்டி மற்றும் சேமிப்புக் கணக்கிற்கான வட்டிக் கிடைப்பனவுகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3**

கடந்த வருடங்களில் வழுக்களை திருத்தம் செய்வதற்காக சுயபரிசோதனை செய்து சீராக்கவேண்டிய ரூபா 30,558,512 தொகை மீளாய்வாண்டில் சீராக்கல் காரணமாக ஒப்பீடு செய்யப்பட்ட தொகைகளுக்கு ஏற்பட்ட தாக்கம் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

**(இ). இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

(i) நிலையான சொத்துக்கள் மறுமதிப்பீட்டுப் பெறுமதிக்கு வெளியிடப்படும் போது அது தொடர்பாக போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தும் உரிமையான்மை மாற்றக் கூற்றில் மறுமதிப்பீடு மிகையாக காட்டப்பட்டிருந்த ரூபா 681,030,453 சம்பந்தமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வு ஆண்டினுல் கணக்குக் குறிப்புக்களின் மூலம் போதுமான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணத்தால் ரூபா 8,992,531 கிரயமான 05 வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டுள்ள போதிலும், தொடர்ந்தும் பாவனைக்குட்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு விகிதம் மதிப்பிடப்பட்டபோது ஏற்பட்ட வழுவினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீள்திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டினுல் கல்வி அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிலிருந்து மூலதன அளிப்பாக முறையே ரூபா 102,000,000 மற்றும் ரூபா 4,380,000 கிடைத்திருந்தும் குறித்த அளிப்புக்கள் ரூபா 89,280,000 என காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததனால் நிதிச் செயற்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களின் கீழ் மூலதன அளிப்புப் பெறுகைகள் ரூபா 17,100,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மன்றத்திற்குரிததான கட்டிடம் 2007 ஆம் ஆண்டில் ரூபா 200 மில்லியன்களுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாட்டின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 14,408,658 ஆன முதலீட்டு வட்டிக் கிடைப்பனவில் ரூபா 333,607 தொகையான முதலீட்டுச் செயற்பாடொன்றல்லாத ஊழியர் கடன் வட்டியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்குக் கிடைக்கவேண்டிய ரூபா 135,570 தொகையான முதலீட்டு வட்டி குறைவாகக் காட்டப்பட்டிருந்ததனால் வருடத்தில் கிடைக்கவேண்டிய மீதிகள் மற்றும் முதலீட்டு வட்டி வருமானம் குறித்த அளவில் குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்

மன்றத்தினால் பேனப்படுகின்ற நிலையான வைப்பு ஏடுகளுக்கேற்ப வருடத்தினுள் பணம் மூலம் கிடைத்த முதலீட்டு வட்டிப் பெறுமதி ரூபா 13,418,665 ஆக இருந்தும் காசுப்பாய்ச்சல் கூற்றில் குறித்த பெறுமதி ரூபா 14,046,602 ஆக இருந்ததினால் ரூபா 627,937 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வு ஆண்டில் ஏனைய பெறவேண்டிய மீதியினுள் உள்ளடங்கியுள்ள பல வருடங்களாக தொடர்ச்சியாகக் கானப்படுகின்ற ஒன்றுசேர்க்கப்பட்ட பெறுமதியான ரூபா 220,479 மீதியை 2017 நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை அறவிட்டுக் கொள்வதற்கு மன்றத்திற்கு முடியாது போயிருந்தது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 2,015,119 ஆகக் காணப்பட்ட கடன்கொடுத்தவர்களின் மீதியை 2017 நவம்பர் 30 ஆந் திகதியாகும் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இக்கடன் மீதிகளில் 5 வருடங்களிற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 1,639,113 ஆகும்.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமானக் கோவையின் நிதிப்பிரமானங்கள் 571 (2) | திரையரங்கு ஒதுக்கீட்டின்போது அறவிடும் வைப்புக்களை உள்ளடக்கிய 2 வருடங்களுக்கு முன்பிருந்து கானப்படுகின்ற மீளச்செழுத்த வேண்டிய விலை மனு வைப்புக்களில் உள்ளடங்கியுள்ள ருக்மனீ தேவி ஞாபகார்த்த மையத்திற்கு உரிய ரூபா 84,000 வைப்பு மற்றும் டவர் மண்டப அரங்கிற்குரிய ரூபா 252,000 வைப்பு தொடர்பாக நிதிப்பிரமானங்களிற்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 ஆம் பிரிவு | மீளாய்வு ஆண்டினுல் மன்றத்தினால் செய்ற்படுத்தப்பட்ட ''மனமே மற்றும் ரேகாவ'' விஷேட கருத்திட்டத்திற்காக மற்றும் ''மனமே அபிமங்கல தெக்ம'' என்பவைக்கான கடித உறைகள், அழைப்பிதழ்கள், வாகன அனுமதிப்பத்திரங்கள், அடையாள அட்டைகள் மற்றும் புத்தகங்களிற்கான உறைகள், டிஜிட்டல் பலகைகள் என்பவைகளை அச்சிடுவதற்கு மொத்தமாக ரூபா 875,666 தொகை செலவிடப்பட்டிருந்தது. பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் தனியார் அச்சகமொன்றின் மூலம் குறித்த சேவைகள் பெறப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டலகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படவேண்டிய விலைகோரல்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் ரூபா 17,552,384 பற்றாக்குறையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 12,050,421 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 5,501,963 இனால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டில் வட்டி மற்றும் வாடகை வருமானம் ரூபா 3,392,644 ஆகக் குறைந்தமை மற்றும் நிருவாக மற்றும் நிறுவனச் செலவினங்கள் ரூபா 1,783,533 இனால் மற்றும் மேம்பாட்டு மற்றும் நலன்புரிச் செலவினங்கள் ரூபா 4,819,563 இனால் அதிகரித்தமை இப்பற்றாக்குறை அதிகரித்தமைக்கான பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது, 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியான நிதிப் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எனினும் ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் மீண்டும் சீராக்கல் செய்யும்போது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 29,169,075, ரூபா 28,695,875, ரூபா 26,376,128, ரூபா 31,686,747 மற்றும் ரூபா 32,104,972 தொகைகளான பங்களிப்பு காட்டப்பட்டடிருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1978 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க டவர் மண்டப திரையரங்கு மன்ற சட்டத்திற்கு ஏற்ப தேசிய கலை நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல், திரையரங்கு பற்றிய அறிவு, அறிந்து கொள்ளல் மற்றும் அதன் பாவனையை அதிகரித்தலும் அபிவிருத்தி செய்தலும், திரையரங்கு நாடக கலைஞர்களுக்கும் கைப்பணியாளர்களுக்கும் பண உதவிகள் செய்தல் மற்றும் நாடக கலைஞர்களின் பயிற்சிகளுக்கு உதவுதல், பாடல் நாடகம், நடன நாடகம் மற்றும் இசையமைப்பு மற்றும் அது தொடர்பில் பரிசோதனைகளை மற்றும் அவற்றை அரங்கேற்றல், மேற்கொள்ளல் சபை தகுதியானவையென கருதும் செயற்பாடுகளுக்காக டவர் மண்டப திரையரங்கினை தேசிய சின்னமாக கொள்ளல், பாதுகாத்தல், நடாத்திச் செல்லல் மற்றும் பாவனைக்கு எடுத்தல் என்பன மன்றத்தின் பிரதான நோக்கங்களாகும்.

(அ). மீளாய்வு ஆண்டில் செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப, நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 34 நிகழ்ச்சித்திட்ங்கள் / கருத்திட்டங்களிலிருந்து மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 5,800,000 ஆகக் கானப்பட்ட 15 நிகழ்ச்சித்திட்ங்கள்/ கருத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்படுத்தப்பட்ட 05 நிகழ்ச்சித்திட்ங்கள் / கருத்திட்டங்களிலின் பௌதீக முன்னேற்றத்தைக் கருதும்போது அது 25 வீதத்திலிருந்து 50 வீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மன்றத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற டவர் நாடக மற்றும் நடனக் கலைப் பாடசாலை மூலம் இரணடு வருட கால முழு நேர நாடக மற்றும் நடனக் கலை உயர் டிப்ளோமா பாடநெறி நடாத்தப்படுவதோடு பாடநெறியில் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடநெறிக் கட்டணங்கள் வருடாந்தம் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் வருடத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 23 இலிருந்து 40 ஆகவும், பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 50,000 இலிருந்து ரூபா 85,000 வரையிலும் அதிகரிக்கப்பட்டிருந்தது. இருந்தும் மாணவர்களுக்குத் தேவையான விரிவுரை மண்டப வசதிகள், நூலக வசதிகள், செயல்முறை பயிற்சி மண்டப வசதிகள், துப்பரவாக்கல் சேவை வசதிகள், கணணி வசதிகள், அணியறை வசதிகள், ஓய்வறை வசதிகள், விடுதி வசதிகள் மற்றும் சிற்றுண்டிச்சாலை வசதிகள் போன்றவைகள் போதுமானவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இலக்கை அடைந்துகொள்வதற்கு ஏற்றவாறு டவர் நாடக மற்றும் நடனக் கலைப் பாடசாலையை துரிதமாக அபிவிருத்தி செய்யும் தேவை தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) அரங்கேற்றக் கலைஞர்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக டவர் மண்டப திரையரங்கிற்கு உரித்தான சனாதிபதி நலன்புரி நிதியத்தின் கட்டுப்பாட்டிற்காக டவர் மண்டப திரையரங்கு மன்றத்தின் பொறுப்புச் சபைக்கு பொறுப்புக்கூற வேண்டிய முகாமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட்டிருந்ததெனினும், 2011 ஆகஸ்ட் 29 ஆந் திகதியிலிருந்து மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை குறித்த சபை கூடியிருக்கவில்லை என்பதுடன் அதன் பிரகாரம் நலன்புரி நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் எதுவித தீர்மானமும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ருக்மனீ தேவி திரையரங்கில் நிரந்தர முகாமையாளரை குறித்த பதவியின் கடமை நடவடிக்கையல்லாத ''மனமே மற்றும் ரேகாவ'' விஷேட கருத்திடடத்தின் கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தி திரையரங்கின் முகாமையாளர் பதவியில் பதில் கடைமையாற்றுவதற்காக பிரிதொரு உத்தியோகத்தரை வேலைக்கு அமர்த்தியிருந்ததனால் மன்றம் ரூபா 48,835 மேலதிக செலவை மேற்கொண்டிருந்தது.

(இ) ''மனமே மற்றும் ரேகாவ'' விஷேட கருத்திட்டத்திற்காக மன்றத்தினால் தொலைபேசிப் பட்டடியல்கள், ஒருங்கிணைப்பு அலுவலர் சம்பளங்கள், காகிதாதிகள், அச்சுச் செலவின்ங்கள், உபசரிப்புச் செலவினங்கள், ஒலிபெருக்கிகளை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் ஏனைய செலவினஙகளாக 2016 ஒக்டோபர் 30 ஆம் திகதியாகும் போது ரூபா 2,035,471 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச்செலவினங்கள் 2016 ஆம் ஆண்டில் வரவு செலவு மற்றும் செய்ற்பாட்டு திட்டத்தினுள் உள்ளடக்கப்படாது இருந்ததுடன் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மேல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கல்வி அமைச்சின் மூலம் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த ''வட கிழக்கு நீர்ப்பாசன மற்றும் விவசாய கருத்திட்டம்'' இற்கு உரித்தான வாகனமொன்று 2015 நவம்பர் மாதம் தொடக்கம் மன்றத்தின் கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அதனை முறையாக மன்றத்திற்கு கையளிப்புச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மன்றத்தின் பிரதான காரியாலயம் நடாத்தப்படுகின்ற இரண்டு மாடிக் கட்டிடத்தில் ஏறக்குறைய 32000 சதுர அடி பரப்பளவிலான ஒரு மாடியை ஓப்பந்தமொன்றில் கைச்சாத்திடாமல் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு 2016 மே மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் உபயோகிப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் கட்டிடத்தை உபயோகிப்பதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உத்தியோகத்தரொருவரை இணைத்துக்கொள்வதற்கு 2015 சனவரி 21 ஆந் திகதி 05 பத்திரிக்கைகளில் பிரசித்த விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு ரூபா 163,736 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், குறித்த விண்ணபதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்காமல், 2015 ஜுலை 02 ஆம் திகதி நிர்வாக சபைத் தலைவரினால் அதற்குப் புறம்பாக மற்றும் ஆட்சேர்ப்பு முறைமையின் 4.2 உப பந்திக்கு முரணாக 60 வயதை தாண்டிய நபரொருவரை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்து குறித்த அலுவலருக்கு 2015 ஜுலை 02 ஆம் திகதி தொடக்கம் 2016 ஒக்டோபர் 31 ஆம் திகதி திகதி வரையிலான கால எல்லைக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 1,361,320 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மன்றத்தினால் நடாத்தப்பட்ட சாதாரண புதுவருட நிகழ்விற்கு மேலதிகமாக, 2016 ஏப்ரல் 26 ஆம் திகதி கலைஞர்கள் மற்றும் ஊழியர் அணியின் புதுவருட விழா எனும் பெயரில் விழா ஒன்றை நடாத்துவதற்காக உபசரிப்புச் செலவாக ரூபா 306,000 , விளம்பரப் பலகைகளுக்காக ரூபா 246,000 மற்றும் வீதி நாடகத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 48,000 என மொத்தம் ரூபா 600,000 மன்றத்தினால் செலவிடப்பட்டிருந்தது. குறித்த தொகை கலைஞர்களின் நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் ஏனைய பல

நிகழ்ச்சித்திட்டங்களிற்காக 2016 ஏப்ரல் 29 ஆம் திகதி மத்திய கலாச்சார நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 600,000 தொகையிலிருந்து ஈடுசெய்யப்பட்டிருந்தது. அவ்வாறிருந்தும் 2016 ஏப்ரல் 26 ஆம் திகதி மன்றத்தின் ஊழியர் அணியினர் தாம் பணியாற்றுகின்ற பிரதான காரியாலயம், டவர் மண்டப திரையரங்கு, எல்பின்ஸ்ட்டன் திரையரங்கு, மற்றும் ருக்மனி தேவி திரையரங்கு போன்ற இடங்களில் கடமைக்காக சமூகமளித்திருந்தமை வரவு இடாப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டதுடன் குறித்த தினத்தில் புதுவருட விழாவொன்று நடாத்தப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்தச் செயன்முறை

2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த எல்பின்ஸ்ட்டன் திரையரங்கினை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் 2017 திசம்பர் 31 ஆம் திகதியாகும்போதும் பூர்த்தியசெய்யப்படாதிருந்தாலும் 2014 ஜுன் மாதம் 18 ஆம் திகதிய பெறுகைக் குழுத் தீர்மானத்திற்கேற்ப திரையரங்கின் உபயோகத்திற்காக 700 ஆசனங்கள் தனியார் கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆசனங்களைப் பொருத்தியதன் பின் அவை உரிய தரத்தில் உள்ளனவா என உறுதி செய்யாமல் மொத்தப் பெறுமதியான ரூபா 12,768,000 தொகையில் ரூபா 9,019,794 தொகை 2015 ஒக்தோபர் 28 ஆம் திகதியாகும் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போதும் குறித்த ஆசனங்களை உபயோகத்திற்கு எடுக்காமல் திரையரங்கினுள் குவிக்கப்பட்டிருந்தன.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 91 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 64 ஆக இருந்தமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 27 ஆகும். அந்த வெற்றிடங்களுள் பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி, உள்ளகக் கணக்காய்வாளர், பாடநெறி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர், சிரேஷ்ட ஒலிக் கட்டுப்பாட்டாளர், ருக்மணிதேவி மற்றும் என்பின்ஸ்டன் திரையரங்கம் ஆகியவற்றில் முகாமையாளர் பதவிகள் 02 உம் வெற்றிடங்களாக காணப்பட்டமையால் அந்தப் பிரிவுகளின் செயற்படுதன்மை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றான பணிப்பாளர், நிர்வாகம் மற்றும் அபிவிருத்திப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரொருவரை இணைத்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஒரு வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் 60 வயதைத் தாண்டிய நபரொருவரை 2015 நவம்பர் 02 ஆம் திகதி ஆட்சேர்ப்புச் செய்து மீண்டும் குறித்த ஒப்பந்த காலத்தை ஒரு வருடத்தால் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் மன்றத்தினால் 2015 நவம்பர் 02 ஆம் திகதி முதல் 2016 ஒக்தோபர் 30 ஆம் திகதி வரையான கால எல்லையினுள் குறித்த அலுவலரிற்கு சம்பளமாக ரூபா 449,242 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மன்றத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2011 ஜுலை 20 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், 2017 நவம்பர் 30 ஆம் திகதியாகும்போதும் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 உப பிரிவின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்கள் 04 மாதங்கள் 10 நாட்கள் காலதாமதத்தின் பின்னர் 2017 ஜுலை 10 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 5.1.2 ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு இலக்குகளை அடைந்து கொள்வதற்காக வருடாந்த இலக்குகளும் குறித்த இலக்குகளுக்காக பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களையும் குறித்து செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும், மன்றத்தின் மூலம் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் அதற்கு அமைவாக இல்லை என அவதானிக்கப்பட்டது.

### 5.3 கணக்காய்வுக் குழுக்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், 2016 ஜனவரி மாதம் முதல் 2017 நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் மன்றத்தினால் கணக்காய்வுக் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

2015 ஜுலை 29 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையினால் மீளாய்வு ஆண்டில் ரூபா 8,577,000 அளவிலான ஏற்பாடுகள் மீதியாகக் காணப்பட்டன.

### 5.5 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணங்கள் 133 மற்றும் 134 ஏற்பாடுகளின் பிரகாரம் மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் உள்ளக ஆய்வின் முறைமைத் தன்மை மற்றும் போதுமானவை தொடர்பாக தொடர்ச்சியான பரிசீலனைகளை நடாத்துவதற்காக உள்ளகக் கணக்காய்வுக் கூறொன்றை தாபிக்க வேண்டியிருந்தும், மீளாய்வு ஆண்டில் உள்ளகக் கணக்காய்வுக் கூறொன்றை தாபித்து உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகளின் நலிவுகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) மூலதன அளிப்புக்கள், முதலீட்டு வட்டிக் கிடைப்பனவுகள் போன்றவைகளை சரியாக கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை |
| | (ii) காசுப்பாய்ச்சல் கூற்றை சரியாக தயாரிக்காமை |
| | (iii) சில அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்காமை |
| | (iv) நடைமுறையல்லா சொத்துக்களை கணக்குகளில் பதியாமை மற்றும் பெறுமானத்தேய்விடப்படாமை |
| (ஆ) பதவியணியினர் நிர்வாகம் | (i) வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யாமை. |
| | (ii) நீண்ட காலமாக சில பதவிகளுக்கு பதில் கடமையாற்றுதல் அடிப்படையில் உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தமை |
| (இ) ஒப்பந்தங்களை நிர்வகித்தல் | (i) பெறுகை வழிகாட்டலுக்கு அமைவாகாமை |
| | (ii) கட்டுமான ஒப்பந்தங்களை உரிய கால எல்லையினுள் பூர்த்திசெய்வதற்கு இயலாது போனமை |
| | (iii) மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் குறைபாடுகள் காணப்பட்டமை |